மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆசிரியர் பணியிடங்கள் இல்லையோ, அதை அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 514. டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

514—

கோவை மாவட்டத்தில் நெசவாளர் கூட்டுறவு சங்கம் ஏற்படுத்துதல்

35664—டாக்டர் மு. சீனியம்மாள் :*

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, அவினாசி ஒன்றியம், சாவகாட்டுப் பாளையம், பெரியார், கோவை ஆகிய மாவட்டங்களையும் சேர்ந்த ஊராதலால், பெரியார் மாவட்டப் பகுதியில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் செயல்படுவது போல், கோவை மாவட்டப் பகுதியிலும் இச்சங்கம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): அரசு ஆவன செய்துள்ளது.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதி, அவினாசி ஒன்றியம், சாவகாட்டுபாளையம் என்பது, பெரியார் மாவட்டத்தையும் கோவை மாவட்டத்தையும் இணைக்கின்ற ஒரு கிராமம். அங்கு சுமார் 1,000 நெசவாளர்கள் வாழ்கிறார்கள். அங்கு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைத்து அது செயல்படாமல் இருந்ததை, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர், அண்ணாவின் பெயரிலே ஒரு கூட்டுறவுச் சங்கத்தை அமைத்துத் தந்ததற்கு நான் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்பாதங்களுக்குச் சமர்ப்பித்துத் தெரிவித்துக் கொள்கிறேன். அதனால் அங்கே இருக்கிற நெசவாளர்கள் குடும்பங்களுக்கு

வேலைவாய்ப்பையும், வருவாயையும் அதிகரித்துக் கொடுத்திருக்கிறார்கள். கோவை மாவட்டத்தில் தனியாக கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் இதுபோல் எத்தனை செயல்படுகின்றன. இன்னும் அவினாசி மற்றும் அன்னூர் ஒன்றியங்களில் இரண்டு கூட்டுறவுச் சங்கங்களை அதிகப்படுத்தித் தர ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே மொத்தம் 79 சங்கங்கள் இருக்கின்றன. அதிலே ஏறக்குறைய 35,283 பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். மொத்தம் கோவை மாவட்டத்தில் 41,683 பேர் நெசவாளர் பெருங்குடி மக்கள் இருக்கிறார்கள். அவர்களில் 35,000 பேர் கூட்டுறவுச் சங்கங்களில் இடம் பெற்றிருக்கிறார்கள். புதிய கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்துவதில் அரசாங்கத்திற்கு ஒன்றும் கஷ்டம் இல்லை. ஆனால் அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் நஷ்டத்திலே இயங்காமல் இருப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருப்பவர்கள் தொடர்ந்து வேலைகளைப் பெறவேண்டும். தறிகளை சரிவர உபயோகிக்க வேண்டும். அப்படியெல்லாம் அவர்கள் ஒழுங்காகப் பணியாற்றினால் அந்தச் சங்கங்கள் நஷ்டத்தில் இயங்காது. லாபத்தில் இயங்கும். அங்கே 1,400 சங்கங்களுக்கு மேலே இருக்கின்றன. அதிலே ஏறக்குறைய 700 சங்கங்களுக்கு மேல் நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே இந்தச் சங்கங்களை லாபத்தில் கொண்டு வந்ததற்குப் பின்னாலேதான் புதிய சங்கங்கள் அமைப்பது பற்றி அரசு ஆலோசிக்கும்.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அடிப்படைக் கல்வி நன்றாகத் தரவேண்டும் என்பதற்காக பெண்களை ஆசிரியைகளாக நியமித்திருக்கிற புரட்சித் தலைவியின் பொன்னான ஆட்சியில், இந்த நெசவாளர் குடும்பங்களில் பெண்களுக்கு என்று சங்கங்களை ஏற்படுத்தி, நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவியின் நல்லாட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பெண்களாலே அவைகள் நடத்தப்படுமானால் நஷ்டத்தில் இயங்குகிற அவை குறையும் என்ற அடிப்படையில் அவினாசி தொகுதியில் பெண்களைக் கொண்ட ஒரு கூட்டுறவுச் சங்கத்தை அமைத்துத் தர ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதியில் மட்டுமல்ல, தமிழகத்தில் பெண்கள் நெசவாளர்களாக இருக்கக்கூடியவர்களுக்கு புதிய திட்டங்களை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி

அவர்கள் கைத்தறித்துறை மானியக் கோரிக்கையில் அறிவிக்க உத்தரவிட்டிருக்கிறார்கள். அது உங்களுக்கு மகிழ்ச்சியான செய்தியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வெ. பழனிசாமி.

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில கூட்டுறவுச் சங்கங்கள் நஷ்டத்தில் இயங்குவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே, கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடைபெறாமல் அதிகாரிகளின் நேரடிப் பார்வையில் இருக்கிற காரணத்தால், நெசவுத் துறையில் பயிற்சி பெற்றிருக்கிற நெசவாளர்களை ஆலோசகர்களாகப் போட்டு அதன் மூலமாக நஷ்டத்தில் இயங்குகிற சங்கங்களை லாபத்தில் இயங்குவதற்கான சூழ்நிலையை அரசு உருவாக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நஷ்டத்தில் இயங்குகிற சங்கங்கள் அனைத்தும் இப்போது நஷ்டம் ஏற்பட்டவை அல்ல. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்னாலிருந்தே பல இலட்சக்கணக்கான ரூபாய்க்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அவைகளை சீர்திருத்துவதற்குரிய பல நல்ல நடவடிக்கைகள் எல்லாம் இப்போது எடுக்கப்பட்டு வருகின்றன. ஏறக்குறைய 3, 4 மாத காலத்திற்குள்ளாக அந்த நெசவாளர் சங்கங்களை எல்லாம் சீர்திருத்தி அமைக்கப்படக் கூடிய நல்ல திட்டங்கள் வெகுவிரைவில் அறிவிக்கப்பட இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 515, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

515—

ஆரணி தொகுதியில் அரசுக் கல்லூரி நிறுவுதல்

***36228—**டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—